பெரியதபாற் கந்தோரில் புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர் : 6 | 1963, சனவரி 16—23 ந் திகதி | இதழ் : 44-45

# "இந்திய—சீன நேரடிப் பேச்சுக்கு வழி பிறக்கும்"

## கொழும்பு மகாநாட்டுமுடிவுகள் 20ந் தேதி வெளியிடப்படும்

"ஆறு ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் மகாநாட்டினது விருப்பத்தின்படி நான் சென்ற தூது சம்பந்தமாக அறிக்கையொன்றினை விடுக்க விரும்புகின்றேன்.

"இம்மகாநாட்டில் கண்ட ஏகமனதான யோசனைகளை இந்திய சீனப்பிரதமர்களுக்கு விளக்கிக் கூறி சீன—இந்திய எல்லைத் தகராற்றைத் தீர்ப்பதற்கு இந்த யோசனைகளை பேச்சு வார்த்தைகளின் அடிப்படையாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்வதே எனது தூதின் நோக்கமாகும். இம்மகாநாட்டு யோசனைகள் தகுந்த காரணங்கட்காக வெளியிடப்படவில்லை. ஏனெனில் இந்திய சீன அரசாங்கங்கள் இவற்றைப் பூரணமாகப் பரிசீலனை .செய்யுமுன் வெளியிடுதல் இவற்றின் நோக்கத்தையே பாதித்திருக்கும். இந்த யோசனைகளை ஜனவரி மாதம் 20 ந் திகதியன்று பிரசுரிப்பதற்கு கொழும்பு மகாநாட்டில் கலந்து கொண்ட இதர நாடுகளின் அங்கீகாரத்தைக் கோரியுள்ளேன்.

"இப்போது பீக்கிங்கிற்கும் புதுடில்லிக்கும் விஜயஞ் செய்து கொழும்பு மகாநாட்டு யோசனைகள் பற்றி பிரதமர் சூ என் லாயுடனும் பிரதமர் நேருவுடனும் பல நாட்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளேன். பீக்கிங்கில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் இந்தோனீஷியக் குடியரசின் முதலாவது உதவி மந்திரி டாக்டர் சுபந்திரியோ எனக்கு உதவியாயிருந்தார். புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஐக்கிய அரபுக் குடியரசின் நிர்வாக சபைத்தலைவர் திரு. அலிசப்ரியும், கானு நீதி அமைச்சர் திரு. ஓ. போரி அட்டாவும் எனக்கு உதவியாயிருந்தனர்.

"நான் நடத்திய பேச்சுவார்த்தைகளிலிருந்து, இந்த ஆலோசனைகள் இறுதியாக அவர்களிடையே நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடைபெற உதவுமென்று நான் நம்புகிறேன். இந்த ஆலோசனைகளில் சில விஷயங்கள் இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே பேச்சுவார்த்தைகளின் வாயிலாகத் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன. இந்த விஷயங்களில் இந்தியாவும் சீனாவும் இப்பொழுது என்ன கருத்துக்கள் கொண்டுள்ளன வென்பதை . நான் அறிவேன். இந்தப் பிரச்னைகள் யாவும் தீர்க்கப்பட்டவுடன் இந்தியாவும் சீனாவும் தங்களிடையே நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடத்த இந்த கொழும்பு மகாநாட்டின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுமென்று நான் நம்புகிறேன்.

"பீக்கிங்கில் விடுத்த கூட்டறிக்கையின்படியே சீனப் பிரதமர் திரு. சூ என் லாய் இந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அதைப்போலவே இந்த ஆலோசனைகளை இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பாரென புதுடில்லியில் விடுத்த கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம்.

"பீக்கிங்கிலும் புதுடில்லியிலும் நான் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி கொழும்பு மகாநாட்டில் கலந்துகொண்ட மற்ற நாடுகளுக்கு அவ்வப்போது அறிவித்துள்ளேன். அது போலவே பிரதமர் திரு. நேருவுடனும் பிரதமர் திரு. சூ என் லாயுடனும் தொடர்ந்து தொடர்பு கொண்டிருப்பேன்".

### "சீனு நிராகரித்ததென்று நான் கூறவில்லை"

—திரு. பீலிக்ஸ்.

"கொழும்பு மகாநாட்டு யோசனைகளைச் சீன அரசாங்கம் நிராகரித்துவிட்டதென்று பாரதப் பிரதமர் நேருவிடம் நான் கூறியதாக "டைம்ஸ் ஆப் இந்தியா" எனும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி இன்று காலை வெளியாகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருந்ததைக் கண்ணுற்றேன். எப்பொழுதாவது நான் பிரதமர் நேருவிடம் அவ்வாறு கூறவில்லை.

"பீங்கிங்கில் பேச்சுவார்த்தை முடிவுற்ற பின்னர் பிரதமர் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறியபடி கொழும்பு மகாநாட்டு யோசனைகள் சம்பந்தமாகச் சீன அரசாங்கத்தின் கருத்து விட்டமான பதிலாகவே இருக்கிறது என்ற அபிப்பிராயத்தைத்தான் இலங்கைத் தூதுக் குழுவினர் எப்பொழுதும் தெரிவித்து வந்தனர்.

"நான் புதுடில்லியிலிருந்து நேற்றுக் காலை புறப்படு முன்னர் இக்கருத்துக்கள் அடங்கிய கடிதமொன்றை "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகைக்கும் பிரசுரிப்பதற்காக அனுப்பியிருந்தேன்".



காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அறுபத்து நான்காவது பிறந்த நாளை நினைவுகூரும் முகமாக அவரது நெருங்கிய நண்பர்களும் அன்பர்களும் ரெஸ்மீட் பிளேசிலுள்ள அவரது இல்லத்தில் செவ்வாயன்று பிக்குமாருக்குத் தானம் வழங்கினர். கவனர் ஜெனரல் பிக்குமாருக்குத் தானம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# தேசியக் கல்வித்திட்டம்

## இதர அரசியல் கட்சிகளின் அபிப்பிராயம் கோரப்படும்

கல்வியமைச்சர் ஜனுப் பதியுத்தீன் மஹ்மூத் தாம் தேசியக்கல்வி முறையொன்றை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முன்பு சகல அரசியல் கட்சிகளுட ம் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் பொதுமக்களுடனும் கலந்தாலோசிப்பாரென 15.1.63ல் உறுதி கூறினர். அவர் அமுலுக்குக் கொண்டுவர உத்தேசித்திருக்கும் கல்வி பற்றிய புதிய விதிகள் அடங்கியுள்ள பாரிய மசோதாவின் பிரதியொன்று அரசியல் கட்சித் தலைவர்களின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் கூறினர்.

தான் கருதும் ஒரு தேசியக் கல்வி முறையானது திரு. டட்லி சேனநாயக்காவோ திரு. என். எம். பெரோராவோ அன்றி திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகமோ நன்றெனக் கருதக்கூடிய ஒரு தேசியக் கல்வி முறையிலிருந்து வேறு படலாம் என்ற காரணத்தினலேயேதான் இந்த மசோதாவை இதர அரசியல் கட்சிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்க விரும்புவதாகவும் இதனுல் அவைகள் இதுபற்றிய தத்தம் கருத்துக்களை வெளியிட முடியுமென்றும் கூறினர் ஜனுப். மஹ்மூத்.

பத்திரிகை நிருபர்கள் மாநாடு ஒன்றில் பேசும்போது தேசியக் கல்வி முறையொன்றை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மட்டுமே தான் இதுவரை எடுத்திருப்பதாகக் கல்வி அமைச்சர் வலியுறுத்திக் கூறினர். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதும் கல்வி சம்பந்தமான மூன்று கொமிஷன்களை நியமித்ததும் தான் முதல் இரண்டு நடவடிக்கைகளாகும். தேசியக் கல்விக் கொமிஷன் அறிக்கையைச் செயற்படுத்தும் கொமிற்றி, கல்விக் கொமிஷன் அறிக்கையின் சிபார்சுகள் சம்பந்தமான தனது கருத்துக்களை ஏற்கனவே சமர்ப்பித்திருக்கிறது. கல்வி சம்பந்தமாகத் தற்போதுள்ள சட்டங்களைச் செல்லுபடியாகாமல் செய்யக் கூடிய ஒரு பிரமாண்டமான மசோதாவொன்றை அவர் இப்பொழுது தயாரிப்பார். கூடிய விரைவில் அமுலாக்க அவர் உத்தேசித்திருக்கும் இம் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனக் கூறினர் அமைச்சர்.

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரை இலவசமாக அளிக்கப்படும் கல்வி இலங்கையில் பிரபல்யமான தொன்றென்று கூறினர் ஜனுப். மஹ்மூத். எனினும் நிதிக் குறைவு, சனப்பெருக்கம் ஆகிய பிரச்சனைகள் இருப்பதாகவும் கூறினர் அவர். ஒவ்வொரு வருடமும் சுமார் 25,000 பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் இடமளிக்க வேண்டியிருப்பதாகவும் சுமார் 9,000 ஆசிரியர்களை நியமிக்க வேண்டியிருப்பதாகவும் இப்பிரச்சனையைச் சமாளிப்பதற்கு பிரதி வருடமும் 5 கோடி ரூபாவை ஒதுக்கி வைக்க வேண்டியிருப்பதாகவும் கூறினர் அவர்.

# நெற்காணிச் சட்டத்தின் கீழ் வாடகை நிர்ணயம்

**அநுராதபுரி, மட்டக்களப்பு, மாத்தளை, சிலாபம்-புத்தளம் ஆகிய பரிபாலன மாவட்டங்களில் முற்றுகவோ அல்லது பிரதானமாகவோ அமைந்துள்ள நெற்காணிகளுக்கு குத்தகைக் கமக்காரர் காணிச் சொந்தக்காரருக்கு கொடுக்கவேண்டிய வாடகையை கமத்தொழிற்சேவை ஆணையாளர் நெற்காணிச் சட்டத்தின் கீழ் நிர்ணயித்துள்ளார்.**

அநுராதபுரி மாவட்டத்தில் முற்றுகவோ அல்லது பிரதானமாகவோ அமைந்துள்ள நெற்காணிகளுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கைபண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 6 புசல் நெல், அல்லது முழுவிளைவில் ஐந்திலொருபங்கு, இதில் எது குறைந்ததோ.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எருவூர்ப்பற்று, கோறளைப்பற்று காரியாதிகாரிகளின் பகுதிகளில் முற்றுகவோ அல்லது பிரதானமாகவோ அமைந்துள்ள நெற்காணிகளுக்கு பெரும்போகத்தில் (முன்மாரி) மானாவாரிப் பயிர்ச்செய்கைக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கை பண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 3½ புசல் நெல், அல்லது முழுவிளைவில் ஆறிலொருபங்கு, இதில் எது குறைந்ததோ. இக்காரியாதிகாரிகளின் பகுதிகளில் பெரும்போகத்தில் நீர்பாய்ச்சிப் பயிர் செய்யும் நெற்காணிகளுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கைபண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 5 புசல் நெல், அல்லது முழு விளைவில் ஐந்திலொரு பங்கு, இதில் எது குறைந்ததோ. இதே காரியாதிகாரிகளின் பகுதிகளில் சிறுபோகத்தில் (காலபோகம்) மானாவாரிப் பயிர்ச்செய்கைக் காணிகளுக்கும் நீர்பாய்ச்சிப் பயிர்செய்யும் காணிகளுக்கும் கொடுக்கவேண்டிய வாடகை செய்கைபண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 7½ புசல் நெல், அல்லது முழு விளைவில் நாலிலொரு பங்கு, இதில் எது குறைந்ததோ.

மட்டக்களப்புப் பிரிவில் மான்முனை தெற்கு எருவில் போறதீவு காரியாதிகாரியின் பகுதியிலும், மான்முனை வடக்குக்காரியாதிகாரியின் பகுதியிலும் முற்றுகவோ அல்லது, பிரதானமாகவோ அமைந்துள்ள நெற்காணிகளுக்கு கொடுபடவேண்டிய வாடகை பின்வருமாறு. (அ) இவற்றுள் பெரும்போகத்தில் (முன்மாரி) மானாவாரிப் பயிர்ச்செய்கைக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கைபண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 2½ புசல் நெல், அல்லது முழு விளைவில் ஆறிலொரு பங்கு, இதில் எது குறைந்ததோ. (ஆ) இக்காரியாதிகாரிகளின் பகுதிகளில் பெரும்போகத்தில் நீர்பாய்ச்சிப் பயிர்செய்யும் நெற்காணிகளுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கை பண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 4 புசல் நெல், அல்லது முழு விளைவில் ஐந்திலொருபங்கு, இதில் எது குறைந்ததோ. இதேகாரியாதிகாரிகளின் பகுதிகளில் சிறு போகத்தில் (காலபோகம்) மானாவாரிப் பயிர்ச்செய்கைக் காணிகளுக்கும், நீர்பாய்ச்சிப் பயிர்செய்யும் காணிகளுக்கும் கொடுக்கவேண்டிய வாடகை செய்கை பண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 5 புசல் நெல், அல்லது முழு விளைவில் நாலிலொருபங்கு, இதில் எது குறைந்ததோ.

மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை தெற்குக் காரியாதிகாரியின் பகுதியில் முற்றுகவோ அல்லது பிரதானமாகவோ அமைந்துள்ள நெற்காணிகளுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கை பண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 12 புசல் நெல், அல்லது முழு விளைவில் நாலிலொருபங்கு, இதில் எது குறைந்ததோ.

மாத்தளை வடக்கு, மாத்தளை கிழக்குக் காரியாதிகாரிகளின் பகுதிகளில் முற்றுகவோ அல்லது பிரதான மாகவோ அமைந்துள்ள நெற்காணிகளுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கை பண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 8 புசல் நெல், அல்லது முழு விளைவில் நாலிலொருபங்கு, இதில் எது குறைந்ததோ.

சிலாபம்-புத்தளம் மாவட்டத்தில் முற்றுகவோ அல்லது பிரதானமாகவோ அமைந்துள்ள நெற்காணிகளுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை செய்கைபண்ணின ஒவ்வொரு ஏக்கருக்கும் 8 புசல் நெல் அல்லது, முழு விளைவில் நாலிலொருபங்கு, இதில் எது குறைந்ததோ.

இச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வாடகைக்கு மேலதிகமாக காணிச் சொந்தக்காரரொருவர் வாடகை கேட்பாராகில் அல்லது பெறுவாராகில் அவர் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தவராகி ரூபா 500 க்கு மேற்படாத தொகை அபராதம் செலுத்தவும், அபராதம் செலுத்தத் தவறினுல் ஒரு மாதத்திற்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியலில் ஒன்றுல் தண்டிக்கப்படக்கூடியவராவர்.

வாடகை நெல்லாகக் கொடுபடலாம். ஆனுல் காணிச் சொந்தக்காரரோ வாடகையைக் குத்தகைக் கமக்காரரோ வாடகையைப் பணமாகப் பெற அல்லது கொடுக்க விரும்பினுல் அவ்வாடகையின் பணப் பெறுமதி உத்தரவாத விலைத் திட்டக் கட்டுப்பாட்டின்கீழ் அந்நிலத்து நெல்லுக்கு விதிக்கப்பட்ட விலையின் பிரகாரம் நெல்லாகக் கொடுபடவேண்டிய வாடகைக்குச் சமனுக இருத்தல் வேண்டும்.

அறுவடைக்கு முப்பது நாட்களுக்குள் வாடகை கொடுபடாவிடில் அவ்வாடகை நிலுவையாகக் கருதப்படும். நிலுவையாக நிற்கும் வாடகைகளுக்கு வருடமொன்றுக்கு 6 வீத வட்டி சேரும்.

நெற்காணிச் சட்டத்தின்படி காணிச் சொந்தக்காரர் தான் பெறும் வாடகைக்கு, வாடகை கொடுத்த தேதி, கொடுத்தவரின் பெயர், கொடுபட்ட வாடகையின் தொகை, வாடகைக் காலம், வாடகைக் காணி ஆகிய விபரங்களுடன் ஒரு பற்றுச்சீட்டுக் கொடுத்தல் வேண்டும்.

மேலும் இதுபற்றிய விபரங்களுக்கு 21.12.1962-ந் தேதி வெளியான 13,441 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

## விவசாயப்பகுதி உத்தியோகத்தர் சிலரின் முறையற்ற செய்கை

### பலர் தற்காலிக வேலை நீக்கம்

புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட நிலம் முழுவதிலும் 1962/63 பெரும்போகத்துக்குக் கரும்பு பயிரிட முடியவில்லையென்று விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சருக்கு கல்லோயா அபிவிருத்தி சபையும் கந்தளாய் சீனிக்கூட்டுத்தாபனமும் 1962 ஆரம்பத்தில் தெரிவித்தன. அபிவிருத்தி செய்யப்பட்ட நிலம் எதுவும் பயிரிடப்படாமல் இருக்கக்கூடாதென்றும் கரும்பு பயிரிடப்படாத நிலத்தில் நெல் பயிரிடப்படவேண்டுமென்றும் அமைச்சர் பணித்தார்.

1961 ஆம் ஆண்டில் இதேமாதிரியான நிலைமைகளின்கீழ் கல்லோயா அபிவிருத்தி சபை இவ்வாறான நிலங்களை விதை நெல் பயிரிடுவதற்காக ஏக்கரொன்றுக்கு 60 ரூபா வீதம் தனிப்பட்டவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்தது. இப்பணிப்புரையை அனுசரித்து, கல்லோயாச் சபையின் கூலியாட்களையும் சாதனங்களையும் விவசாயப் பகுதியால் வழங்கப்பட்ட தூய எச். 4 விதை நெல்லையும் உபயோகித்து 1962/63 பெரும்போகத்தின் போது கல்லோயா அபிவிருத்திச்சபை ஏறத்தாள 3000 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்துள்ளது. கந்தளாய் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தமட்டில், அவ்வாறான நிலத்தைக் கூட்டுத்தாபனத்துக்காக வாடகை அடிப்படையில் யந்திரக்கலப்பைகளைக்கொண்டு உழும்படியும் எச் 4 விதை நெல்லைக் கடனுக வழங்கும்படியும் விவசாயப் பகுதிக்கு அமைச்சர் பணித்தார். அதற்கேற்ப, கரும்புச் செய்கைக்காகப் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட நிலத்தில் ஏறத்தாள 1200 ஏக்கரில் கந்தளாய்க் கூட்டுத்தாபனம் நெல் சாகுபடி செய்துள்ளது.

கனரக ரஷ்ய யந்திரக்கலப்பைகளையும் வாகனங்களையும் உபயோகித்து கந்தளாய்க்கூட்டுத் தாபனத்துக்காகக் காடுகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயப் பகுதி உத்தியோகத்தர்கள் மேலும் சுமார் 600 ஏக்கர் நிலத்தைத் துப்புரவாக்கி ரஷ்ய யந்திரக் கலப்பைகளையும் பகுதி வாகனங்களையும் அரசாங்கக் கூலியாட்களையும் எரிபொருளையும் விவசாயப் பகுதியின் அங்கீகாரமின்றிப் பயன்படுத்தி இந்த நிலத்தில் அவர்களே விவசாயம் செய்திருந்ததாக விவசாயப் பகுதியைச்சேர்ந்த தொழிற் சங்கமொன்று விவசாய அதிபதிக்குத் தகவல் தெரிவித்தது. விவசாயப் பகுதியால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, அதிகாரமற்ற நெல் விவசாயத்துக்காகச் சில விவசாயப் பகுதி உத்தியோகத்தர்களால் அரசாங்க உடைமைகள் பயன்படுத்தப்பட்டதெனவும் இதனுல் அரசாங்கத்துக்கு அனவசியமான செலவு ஏற்பட்டதெனவும் புலனுயிற்று. இத் தொடர்பாக, விவசாயப் பகுதியில் அரசாங்கப் பண்ணைகளிலுள்ள பண்ணை மனேஜர்களும் இதர உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தங்கள் பங்களாவளவுகளில் கோழிப் பண்ணைகளையோ அன்றி ஒரு பசுவையோ வைத்திருக்க அனுமதிக்கப்படுவதில்லை யென்பதை இங்கு குறிப்பிடவேண்டும். எனெனில் இது துஷ்பிரயோகத்துக்கு இட மளிக்கக் கூடும்.

விவசாயப் பகுதியால் இந்த முறைப்பாடு சரிவர விசாரணை செய்யப்பட்டது. தொடர்புள்ள ஊழியர்கள்மீது கூறப்பட்ட குற்றச் சாட்டுகளுக்குரிய போதிய சான்றுகள் பிரத்தியட்சமாகக் காணப்பட்டன. இந்த விடயத்திலும், சுமார் 100 ஏக்கர் நிலத்தில் அதிகாரமற்ற நெல் விவசாயம் செய்துள்ளதும் தமன்கடுவ மிருக வளர்ப்புத் திட்டத்துக்கு வெளியேயுள்ளதுமான இதே வகையானதொரு விடயத்திலும் விவசாயப் பகுதி அதிபதி கடுமையான நடவடிக்கை யெடுத்து வருகிறர்.

அரசாங்க உபகரணங்களினதும் கூலியாட்களினதும் அதிகாரமற்ற பாவனை நிறுத்தப்படவேண்டும்.

ஒரு பூர்வாங்க விசாரணைக்குப்பின் அனேக உத்தியோகத்தர்களை விவசாயப் பகுதி அதிபதி கடமையிலிருந்து இடை நிறுத்தஞ் செய்திருப்பதோடு அதிகாரமற்ற விவசாயத்தின் நிருவாகத்தையும் பொறுப்பேற்றுள்ளார். இப்பயிரை கந்தளாய் விவசாய நிலையம் பார்த்துக் கொள்ளும். இந் நிலையம் இப்பயிருக்கு அண்மையில் இருப்பதோடு இங்கு இப் பயிரைப் பார்த்துக் கொள்ளக்கூடிய திறமைவாய்ந்த ஆவுணியும் உத்தியோகத்தர்களும் உள்ளனர். தொடர்புள்ள உத்தியோகத்தர்களுக்கெதிராக வழக்குத் தொடருவதற்கு அற்றார்னி ஜெனரலின் ஆலோசனையுடன் நடவடிக்கை யெடுத்து வருகிறர் விவசாயப் பகுதி அதிபதி.

## சதுப்புநில அபிவிருத்தி

ஈரலிப்பு மண்டலத்திலும், கிழக்கு மாவட்டத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்திலும் சதுப்பு நிலப் பகுதிகளின் வடிகால் அமைப்பையும், அவற்றை மீட்டெடுப்பதையும் தக்கவாறு கவனிப்பதற்காக நீர்ப்பாசனப் பகுதியின் ஒரு விசேஷ பிரிவை காணி, விவசாய, நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா நிறுவியுள்ளார். சிலாவத்திலிருந்து தங்காலை வரைக்கும் உள்ளதும், கிழக்கு மாகாணக்கரையோரம் யாழ்ப்பாணக்குடா ஆகிய பகுதிகளில் உள்ளதுமான சதுப்பு நிலம் சுமார் 1,76,000 ஏக்கர் வரையிலுள்ளது. இப்பிரிவின் பிரதி அதிபர் விவசாய, கமத்தொழிற் சேவைப்பகுதி, மீன்பிடிப்பகுதி ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகொண்டு கருமம் ஆற்றுவார்.

கரையோர சதுப்பு நிலங்களில் அபிவிருத்தி செய்வதில் பின்வரும் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன :—

(1) நதிமுகங்களில் மணல் ஒடைகள் அமைத்தல்.

(2) உப்பு நீரை அகற்றும் திட்டம்.

(3) வெள்ளப்பெருக்கு.

(4) வடிகால் வழிகளை அடைத்தல்.

(5) சல்வீனியா நீர்ப்பூண்டு.

(6) மீன்பண்ணைகள் அபிவிருத்தி செய்தல்.

(7) யந்திரமீன் பிடிப்படகுகளுக்கான துறைமுகங்களை நிறுவுதல்.

(8) பள்ளப் பகுதிகளில் உள்ள வயல்களில் வெள்ளம் மேவுதல்.

(9) உவர் நீரினும், வெள்ளத்தை எதிர்த்தும் வளரக் கூடிய நெல் வகையை விருத்தி செய்தல்.

அமைச்சின் ஸ்திதியில் நடைபெறும் ஒரு கூட்டுக் குழுவின் கூட்டத்தில் இவ்வேலைகளின் ஒருங்கிணைப்புப்பற்றி விவாதித்து முடிவு செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வடிகால் திட்டங்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும். பெரிய, சிறிய, வடிகால் திட்டங்களை நன்னிலையில் வைத்திருப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்படும்.

சிறிய வடிகால் திட்டங்களுக்கு ஆகும் செலவுகளை கமத்தொழில் பகுதியே மேற்கொள்ள வேண்டும்.

வடிகால் வசதிகளை முற்றுக ஆராய்ந்து முடிவு செய்யும் நீரை இறைப்பதற்கு எந்த ஏற்பாடுகளும் செய்து கொள்ளப்படமாட்டாது.

# கொழும்பு மகாநாட்டின் ஆறு யோசனைகள்

## "சீன இராணுவம் 12 1/2 மைல் தூரம் வாபஸ் பெறவேண்டும்"

## "இந்திய இராணுவம் இப்போதுள்ள இடங்களில் இருக்கவேண்டும்"

**1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ந் திகதி முதல் 12 ந் திகதி வரை கொழும்பில் கூடிய ஏீக்கோஷ்டியிலும் சேராத ஆறு ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் மகாநாடு தெரிவித்த யோசனைகளின் விவரம் பின்வருமாறு :—**

**யுத்த நிறுத்த காலம் :**

(1) இப்பொழுதிலிருந்துவரும் உண்மையான யுத்த நிறுத்த காலம் இந்திய —சீனத் தகராறைச் சமாதானமாகத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல ஆரம்பமாகுமெனக் கொழும்பு மகாநாடு கருதுகிறது.

(2) மேற்குப் பகுதியைப் பொறுத்தவரை பிரதமர் சௌ என்—லாய் 1962 நவம்பர் 21 ந் திகதியிலும் 22 ந் திகதியிலும் பிரதமர் நேருவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல, சீன அரசாங்கம் தங்களுடைய இராணுவக் காவல் நிலையங்களிலிருந்து 12½ மைல் தூரம் வாபஸ்பெறும் தங்கள் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மகாநாடு அரசாங்கத்துக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறது.

இந்திய அரசாங்கம் தங்களுடைய இப்போதுள்ள இராணுவ நிலையை அப்படியே வைத்திருக்கவேண்டுமென்று மகாநாடு சீன-இந்திய அரசாங்கத்துக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கும்.

எல்லைத் தகராறு இறுதியாகத் தீர்க்கப்படும்வரை சீன இராணுவ வாபஸால் காலியாக்கப்பட்ட பிரதேசம் இராணுவ சூன்யப் பிரதேசமாயிருக்கும். இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளும் சிவில் காவல் நிலையங்களால் இப்பிரதேசம் நிர்வகிக்கப்பட வேண்டும். இப்பகுதியில் இந்தியா, சீனு ஆகிய இரு நாடுகளும் முன்பு வைத்திருந்த உரிமைகளுக்குக் குந்தகம் ஏற்படாதவாறு இந்த ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

**கிழக்குப் பகுதி :**

(3) கிழக்குப் பகுதியைப் பொறுத்தவரை, இரு அரசாங்கங்களாலும் அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டு எல்லையே அந்தந்த நாட்டின் நிலைக்குரிய யுத்தநிறுத்த எல்லையாகப் பயன்படலாம்.

(4) மத்திய பகுதியின் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, பலாத்காரத்தைக் கைக்கொள்ளாமல் இப்பிரச்சினைகள் சமாதான வழிகளில் தீர்க்கப்படுமென்று மகாநாடு யோசனை கூறுகிறது.

(5) இந்த யோசனைகள் அமுல் நடத்தப்பட்டால் யுத்தநிறுத்தம் பலமடைவதற்கு உதவியாயிருக்குமாதலின், யுத்த நிறுத்த நிலையிலுள்ள பிரச்சினைகளைப் பரிகரிக்கும் நோக்கத்துக்காக இருதரப்பினரினதும் பிரதிநிதிகள் ஒன்று கூடிப் பேசுவதற்கு இந்த யோசனைகள் வழி செய்யவேண்டுமென்று மகாநாடு நம்புகிறது.

(6) உத்தேச வேண்டுகோளுக்கு ஒரு திட்டமான பதிலளிப்பதால், எல்லைகளை இறுதியாக நிர்ணயிக்கும் விஷயம் சம்பந்தமாக இரு அரசாங்கங்களில் எந்த அரசாங்கத்தின் நிலைக்கும் குந்தகம் ஏற்படாதென்று தெளிவாக்க மகாநாடு விரும்புகிறது.

# தென்னைப்பசளை உதவித்திட்டம்

## 1963 ம் ஆண்டின் பாவிப்பிற்குத் தேவைப்படும் பசளை

தென்னைப் பசளை உதவித் திட்டத்தின் கீழ் பெருந்தென்னந் தோட்டங்களிலும் சிறுதென்னங்காணிகளிலும் 1963 ம் ஆண்டில் பாவிப்பிற்குத் தேவையான பசளைக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**திட்டம்**

தென்னைப் பசளை உதவித்திட்டத்தின் கீழ் தென்னங்காணிகளில் பாவிக்கப்படும் பசளையின் விலையின் ஒரு பகுதியை அரசாங்கம் கொடுக்கும். அரசாங்கத்திற்கு இப்பண உதவியைத் திரும்பக் கொடுக்கத் தேவையில்லை. இது ஒரு தீர்ப்பான ஈகை. **பெருந் தோட்டங்களுக்கு** (அதாவது 20 ஏக்கருக்கு மேற்பட்ட தென்னங் காணிகளுக்கு) பாவித்த பசளையின் விலையின் **மூன்றில் ஒரு பங்கை** அரசாங்கம் கொடுக்கும். **சிறு காணிகளுக்கு** (அதாவது 20 ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த பரப்புள்ள தென்னங்காணிகளுக்கு) பாவித்த பசளையின் **சரி பாதி** விலையை அரசாங்கம் கொடுக்கும்.

**பெருந்தோட்டங்கள்**

20 ஏக்கருக்கு மேற்பட்ட பெருந்தென்னந்தோட்டங்களுக்கு விண்ணப்பப் பத்திரங்களை நேரே இக்கந்தோருக்கு அனுப்பவேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் தெங்குப் புனருத்தாரண அத்தியட்சகர், தபால் பெட்டி 1388, வை. எம். பி. ஏ. கட்டடம், கோட்டை, கொழும்பு என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். பெருந் தோட்ட விண்ணப்பப் பத்திரங்கள் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

**சிறு காணிகள்**

20 ஏக்கருக்குக் குறைந்த சிறு காணிகளுக்குத் தேவையான விண்ணப்பங்களை இக்கந்தோருக்கு நேரடியாகவோ அல்லது கிட்டிய கூட்டுறவுக் கமத்தொழிற் பொருள் விற்பனைச் சங்கம், தெங்குப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவோ அனுப்பலாம்.

**கூட்டுறவுச் சங்கத்துக்கூடாக** விண்ணப்பஞ் செய்யவிரும்பும் ஒரு சிறு காணிக்காரர் கிட்டிய கூட்டுறவுச் சங்கத்திலிருந்து தேவையான விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். தமிழ் விண்ணப்பப் பத்திரங்களை வட, கீழ் மாகாணங் களிலும், புத்தளம் பகுதியிலும் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தில் இதுவரை பங்குபற்றிய எல்லாக்கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இக்கந்தோருக்கு **நேரடியாக** விண்ணப்பஞ் செய்யவிரும்பும் ஒரு சிறு காணிக்காரர் தேவையான விண்ணப்பப் பத்திரங்களை தெங்குப் புனருத்தாரண அத்தியட்சகர், தபால் பெட்டி 1388, வை. எம். பி. ஏ. கட்டடம், கோட்டை, கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். சிறு காணி விண்ணப்பப் பத்திரங்களை சிங்களத்திலாவது, தமிழிலாவது, ஆங்கிலத்திலாவது இக்கந்தோரிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

½ ஏக்கருக்குக் குறையாத விசாலமுள்ள சிறு தென்னங்காணிகள் மாத்திரமே இத்திட்டத்தில் பங்குபற்றத் தகுதி உடையனவாகும்.

**முடிவுத் திகதி**

1963 ம் ஆண்டின் பாவிப்பிற்குத் தேவைப்படும் பசளைக்கு விண்ணப்பங்களை **1963 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ந் திகதிக்கு** முன்னராக அனுப்பவேண்டும்.

**பா. மகாதேவா,**
தெங்குப் புனருத்தாரண அத்தியட்சகர்.

தெங்குப் புனருத்தாரணப் பகுதி,
த. பெ. இல. 1388,
வை. எம். பி. ஏ. கட்டடம், கொழும்பு 1.

# இலங்கை மகா வங்கி

## (26.12.62 ந் திகதிய தொடர்ச்சி)

1960 ம் ஆண்டில் 3,333 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மொத்தத் திரவச் சொத்துக்களின் சராசரி, 1961 ம் ஆண்டு கார்த்திகையில் முடிவுற்ற பதினொரு மாதங்களிலும் ரூபா 3,750 இலட்சத்திற்கு அதிகரித்தது. திரவச் சொத்துக்களின் விகிதாச்சாரம் 1960 ம் ஆண்டுக்குரிய கேள்வி வைப்புக்களின் 57·2 சதவீதத்திலிருந்து, 1961 ம் ஆண்டு கார்த்திகையில் 57·6 சதவீதத்திற்கு உயர்ந்தது.

1960 ம் ஆண்டு மார்கழி மாதத்தில் ரூபா 395 இலட்சங்களாக விளங்கிய மேலதிக ஒதுக்கு நிதிகள் 1961 ம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களிலும் நிதானமாகக் குறைந்தன. ஆவணி மாதம் முதல் வங்கிகள் மேலதிக ஒதுக்கு நிதிகளை வைத்திருக்கவில்லை. 1961 ம் ஆண்டு தை மாதத்திலும், மாசி மாதத்திலும் வங்கிகள் கணிசமான அளவுடைய மேலதிக ஒதுக்கு நிதிகளை வைத்திருந்தன எனினும், 1961 ம ஆண்டு மாசி மாதம் 10 ம் திகதி முதல் விசேட ஒதுக்குநிதித் தேவைகள் சம்பந்தமான விதி முறைகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, இந்த மேலதிக ஒதுக்குநிதிகள் குறிப்பிடும்படியாகக் குறைந்தன. 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் முதல் 1961 ம் ஆண்டு மாசி மாதம் வரை வர்த்தக வங்கிகளின் மேலதிகமான ஒதுக்கு நிதிகள் அதிகரித்தமை, பெரும்பாலும் 1960 ம் ஆண்டிற் புகுத்தப்பட்ட நாணய கட்டுப்பாடு நடவடிக்கைகள் வர்த்தக வங்கிகளின் பொருள் வளங்களில் ஒரு பகுதியைச் செயலறச் செய்தமையின் பயனால் ஏற்பட்டதாகும்.

1961 ம் ஆண்டு பங்குனி மாதம் வரை பல வங்கிகள் தமது மேலதிகமான ஒதுக்கு நிதிகளைப் பாவிப்பதன் மூலமாகத் தமது அதிகரித்த கடன்களுக்கும், முற்பணங்களுக்கும் நிதியீட்டம் செய்யமுடிந்தது. எனினும் பங்குனி மாதத்திற்குப் பின் கொடுகடன் தேவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பைச் சமாளிப்பதற்காக அநேகமான வங்கிகள், மகாவங்கியிடமிருந்து கடன்படவேண்டி நேரிட்டது. இக்கடன் பாடுகள் இவ்வருடம் முழுவதும் பெரும் அளவினதாக விளங்கின. (ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் இப்போக்கிற்கு விதிவிலக்காகும்). வங்கிகளை முழுமையாக நோக்குமிடத்து மேலதிக ஒதுக்கு நிதிகள் இருந்த காலமாகிய தை, மாசி மாதங்களிலும்கூட, தனித்தனியாக சில வங்கிகள் மகாவங்கியிடமிருந்து கடன்பட்டிருந்தன. மேலதிக ஒதுக்குநிதிகள் வெவ்வேறு வங்கிகளிடையே கூடியும் குறைந்தும் அமைந்து இருந்தமையால் இது பெரும்பாலும் ஏற்பட்டது.

1961 ம் ஆண்டு வங்கிகளிடையேயுள்ள கடன்பாடுகள் முந்தைய ஆண்டு இருந்ததிலும் பார்க்க உயர்ந்ததாகும். வங்கிகளின் திரவச்சொத்து நிலை குறைந்தமையால் அநேகமான வங்கிகள் வாடிக்கையாகப் பணச்சந்தையிற் கடன்படவேண்டி நேரிட்டது. வங்கிகளிடையேயுள்ள கடன்பாடுகள் 1961 ம் ஆண்டு 404 இலட்சம் ரூபாய்களாக இருந்தமை 1960 ம் ஆண்டிற்குரிய 369 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடத்தக்கது. 1961 ம் ஆண்டில் வங்கிகளிடையேயுள்ள கடன்பாடுகள் நிதானமாக இருந்தன எனினும் அழைப்புக் கடன்களின்மேல் உள்ள வட்டிவிகிதம் மாறுபாடின்றி 2 சதவீதமாக விளங்கியது.

1961 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30 ம் திகதி முடிவுற்ற ஓராண்டு காலத்தில் தனிப்பட்டோர் துறைக்கு வங்கிகள் வளங்கிய முற்பணங்களைப் பற்றிய பின்வரும் விளக்கம், அரைவருட அளவீட்டை ஆதாரமாகக் கொண்டவையாகும்.

1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30 ம் திகதி முடிவுற்ற காலத்தில் மொத்த முற்பணங்கள் 5,609 இலட்சம் ரூபாய்களிலிருந்து வீழ்ச்சியடைந்து 5,586 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இம் மொத்தத் தொகையின் கூறுகளில் ஒன்றாகிய நிதியீட்டத் தேவைகளுக்கான முற்பணங்களின் பேரிலேயே ஆகக்கூடிய வீழ்ச்சி ஏற்பட்டது. நிதியீட்டத் தேவைகளுக்கான முற்பணங்கள் 1,016 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 884 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தன. நுகர்ச்சிக்கான முற்பணங்கள் 351 இலட்சம் ரூபாய்களிலிருந்து 302 இலட்சம் ரூபாய்களுக்கும், ஏனைய முற்பணங்கள் 86 இலட்சம் ரூபாய்களிலிருந்து 78 இலட்சம் ரூபாய்களுக்கும் குறைந்தன. மேற்கூறியவற்றிற்கு எதிர்மாறான முறையில், வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 3,851 இலட்சத்திலிருந்து ரூபா 3,927 இலட்சத்திற்கும், விவசாயத் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 104 இலட்சத்திலிருந்து ரூபா 108 இலட்சத்திற்கும் அதிகரித்தன. கைத்தொழிற் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 201 இலட்சத்திலிருந்து ரூபா 86 இலட்சத்தால் குறிப்பிடும்படியாக அதிகரித்து ரூபா 287 இலட்சத்தை அடைந்தன."

[தொடரும்]

# அம்பலம் ஓயா வாவியில் படகுச்சவாரி

கல்லோயாப் பகுதி இப்போது செயற்கை ஏரிகளும், கால் வாய்களும் மலிந்த ஒரு பிரதேசமாகத் துரிதமாக மாறிவருகிறது. ஏற்கனவே இங்கு ஆறு பெரும் நீர்த்தேக்கங்கள் உள்ளன. காலவேகத்துடன் போட்டியிட்டுக்கொண்டு ஏழாவது அணைக்கட்டாகிய நாமல் ஓயா அணைக்கட்டும் இப்போது நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இதுதவிர இப்பிரதேசத்தின் குறுக்கும் நெடுக்கும் சிலந்திவலை பின்னியது போன்று மொத்தம் 700 மைலுக்கு மேல் நீளமான நீர்ப்பாசனக் கால்வாய்களும் இவற்றினிடையே சிறு சிறு நீர்ப்பாசனக் குளங்களும் செறிந்து விளங்கி மொத்தம் 87,000 எக்கர் புதிய பழைய விவசாயக் காணிகளுக்கு நீர் வளம் அளிக்கின்றன.

### பறவைகளும் யானைகளும்

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் இப்பிரதேசத்தின் அடர்ந்த காடுகளுக்குள் மனிதன் எவ்வளவு தூரம் செல்கிறானோ அவ்வளவுக்கு அங்கே நூற்றாண்டுக்காலமாக வாழும் மிருகங்கள், பறவையினங்களை இடம் பெயரச் செய்கிறான் என்பதே பிரபல நம்பிக்கையாயிருந்து வந்தது. அதற்கு ஆதாரமில்லாமலும் இல்லை. ஆனால், அதேநேரத்தில் மனிதன் தன்னைத்தவிர மற்றும் உயிரினங்கள் வாழவும் தகுந்த நிலைமையைச் சிருட்டிப்பவனாகவே தோன்றுகிறான். நீர்வாழ் ஜெந்துக்களை உண்ணும் பறவையினங்களின் வாழ்க்கையும் இதில் அடங்கும். அத்துடன் கல்லோயாவிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், யானைக் கூட்டங்கள் பெருகிவருகின்றனவென்றும், இப்பகுதிகளில் ஏராளமான தண்ணீர் வசதியும், உணவு வசதிகளும் கிடைக்கக்கூடியனவாயுள்ளதே இதற்குக் காரணமென்றும் கருதுபவரும் உளர்.

### நீர்வளமே காரணம்

இலங்கையில் வேறெங்குமில்லாத வகையில் இப்பிரதேசத்திலே செயற்கை ஏரிகள் காணப்படுவதும், நீரில் அல்லது சதுப்பு நிலங்களில் நீந்தியோ உலாவியோ இரையுண்ணும் பறவையினங்கள் பெருகுவதற்குக்காரணமாகக் கருதப்படுகிறது. ஆற்றுக்குக் குறுக்கே அடிக்கடி அணைகட்டுவதற்கு இடப்படும் மண்பொதிகளும், அவற்றுக்கு ஆதாரவாயுள்ள மரக்கம்பங்கள் மழைகாலத்தில் ஆறு பெருகும் போது பாதிவரை ஆற்றில் மூழ்கி நிற்பதும் இப்பறவையினங்கள் அவற்றில் தங்கி இரை யுண்ணவும் கூடுகட்டி வாழவும் அற்புதமான வகையில் தூண்டு கோலாயமைகின்றன.

பிரமாண்டமான கல்லோயா ஏரி பூர்த்தியானதும் அடுத்து மூன்று, நான்கு வருடங்களுக்கு கொசபொல்லை பிரதேசமெங்கும் நீர்ப்பறவைகளால் நிறைந்து விளங்கியதை எவரும் மறந்திருக்கமாட்டார். ஆனால், பின்பு பாரிய மரங்களின் கிளைகள் உலர்ந்து அற்று விழத்தொடங்கியதும் அப்பறவையினங்கள் முக்கியமாக பெரும் பறவையினங்கள் இடம் பெயர்ந்து வேறு ஏரிகளை நாடத்தொடங்கின. மிக அண்மையில் இவ்வாறு பூர்த்தியான செயற்கை நீர்த்தேக்கங்கள் அம்பலம் ஓயா, மலையடி நீர்த்தேக்கங்கள் ஆகும். இவற்றில் முதன் முதலாகக் கடந்த பருவப் பெயர்ச்சிக் காலத்தில் தான் தண்ணீர் தேங்கியது.

### இடம் பெயர்ந்த பறவைகள்

பெலிக்கன், வெள்ளை நாரை, நீர்க்கொக்கு மற்றும் கூழைக்கடாபோன்ற மீன் கொத்தி யுண்ணும் பறவைகள் முதலியவற்றை ஏராளமாக கண்டு அவற்றில் மனம் லயித்த நான், இப்புதிய ஏரிகளில் உள்ளவற்றை ஆராய அண்மையில் இவற்றைச் சுற்றிப்பார்த்தேன். அவ்விதம் பார்த்தபோது பிரசித்தி பெற்ற "ருஹுனே பறவைப் பாதுகாப்புப் பகுதி" தான் என் நினைவுக்கு வந்தது. பருவக்காலம் முடிவுறும் தருணமாகையால் அப்போது இளம் பறவைகள் கிளைக்குக் கிளை தாவுவதையும், அவற்றின் கூடுகளுள்ள கிளைகளில் உறுதியற்ற நிலையில் நின்று ஊஞ்சலாடுவதையும் கண்டு களித்தேன்.

### குஞ்சுகளின் கும்மாளம்

பல்வேறு பருவமுள்ள பெலிக்கன் குஞ்சுகள் அவற்றின் கூடுகளில் இல்லாவிட்டால் பெருமரங்களில் கிளைகள் தோறும் பரவிநிற்பதை அவதானித்தேன். கூட்டம் கூட்டமாகக் காணப்பட்ட மட்டைச் சோண்டன் குஞ்சுகள் அவற்றுக்கு இடையூறாக வந்த என்னிடமிருந்து தப்புவதாக எண்ணிக் கிளைக்குக்கிளை தாவிய போது தவறித் தண்ணீரிலும் விழுந்தன. கிழைத் தேசச் சாம்பல் வர்ண நெடுங்கால் நாரைகள் நாங்கள் சென்ற சிறிய படகுக்கு, வழிகொடுக்கத் தத்திய போது அவற்றின் செட்டைகூரும் கழுத்தும் நீர்த்தாவரங்களிடையே சிக்குவது போல் தோன்றின. மீன்கொத்தியினங்கள், நீர்க்கொக்கு வகைகளும் தமது குஞ்சுகளுடன் காணப்பட்டன. பசுமையான, உலர்ந்த எல்லா மரங்களின் கிளைகளும் இப்பகுதியிலே சந்ததி சந்ததியாக வாழும் நீர்ப் பறவையினங்களின் எச்சங்கள் படிந்து உறைந்து எங்கும் வெள்ளைவெளேரென்று காட்சியளித்தன.

### பரிதாபக்காட்சிகள்

இந்த அதிசயக் கண்டுபிடிப்புக் கதை கல்லோயாப்பள்ளத்தாக்கில் வசிக்கும் அனேகருக்குக் கூட புதியதாயிருக்கலாம். ஆனால், இதிலும் துக்கரமான ஒருபகுதி உண்டு. அதனையும் எடுத்துக்காட்டாவிடின் இது பூர்த்தியாகாது. அதாவது, "அதிக தகுதிவாய்ந்த பிராணி உயிர் வாழ்கிறது" என்ற காட்டுப்பிராணிகளின் வாழ்க்கை நியதி இங்கே கண்கூடாகக் காணப்பட்டது. நமது சிறிய "வைபர் கிளாஸ்" படகில் நாம் சென்ற போதிலும் கூட நமது தலைக்கு மேல் இருந்த கிளைகளில் கூடுகளிலே கிடந்த அரைகுறை வளர்ச்சியுள்ள பெலிக்கன் பறவைக் குஞ்சுகள் குழப்பமடைந்து பறக்க முடியாமை காரணமாகச் சில கீழே தண்ணீரிலும் "பொத்" தென்று விழுந்தன. அநேகம் நீந்திக்கரை சேர்ந்த போதிலும் சில குஞ்சுகள் உடனடியாகச் செத்து மிதக்கத் தொடங்கின. ஒரு குறிப்பிட்ட மரத்தில் கிடந்த நான்கு பெலிக்கன் பறவைக் கூடுகளில் ஒன்றைத் தவிர ஏனையவை இவ்வாறாகக் காலியாகிவிட்டன.

இன்னொரு விபரம் தெரியாத பரிதாப சம்பவச் சின்னங்களையும் காணக்கூடியதாயிருந்தது. செத்து நாற்றமெடுக்கத் தொடங்கிய ஆறு குஞ்சுகளின் சடலங்கள் கூட்டின் பக்கங்களில் தொங்கிக் கொண்டிருக்கக் காணப்பட்டதே அதுவாகும். இம்மாதிரி மற்றும் கூடுகளிலும் தென்படக்கூடிய பரிதாபக் காட்சிக்கான காரணத்தை எவரும் ஊகித்துக் கொள்ளலாம். ஏதாவது ஒரு பாம்பு இக்குஞ்சுகளில் ஒன்றைக் கவ்வி இரையாக்க எத்தனித்த போது தாய்ப் பறவையின் விளைவாகவும் இப்பரிதாபக் காட்சிகள் சம்பவித்திருக்கலாம்.

ஏரியின் மற்றோரிடத்தில் கிழைத் தேசச்சாம்பல் நிற நாரைக் குஞ்சுகள் இரண்டின் சடலங்கள் மிதந்து கொண்டிருந்தன. நமது படகின் முனை அவற்றில் இடித்ததும் அவை துண்டு துண்டாகச் சிதறின. இன்னோரிடத்தில் மட்டைச் சொண்டன் குஞ்சு ஒன்று தலைகிழாகக் காலில் தொங்கிக்கொண்டிருந்தது. அதை நிமிர்த்திக் கிளைகளில் பத்திரமாக விட முயன்ற போது அந்த நிலைமையிலும் கூட அதன் அலகினாலும் கழுத்தினாலும் நமக்கு எதிர்ப்பைக்காட்டியதுடன் எங்கள்படகு கண்ணுக்கு மறையும் வரை பயத்தினால் அலறிக் கொண்டேயிருந்தது.

பறவையினங்களில் பிரியம் உள்ளோருக்கு மலையடி, அம்பலம் ஓயா நீர்த்தேக்கப் பிரதேசங்கள் மிகவும் வாய்ப்பானவையாகும். ஆனால், ஒரு படகின் துணையின்றி இவற்றினுள் ஊடுருவிச் செல்ல முடியாது. நான்கு பேர் செல்லக் கூடியதும், இயந்திரத்தினால் இயங்குவதுமான சிறிய "வைப்பர் கிளாஸ்" படகு இதற்காக கல்லோயா அபிவிருத்திச் சபையின் பொதுசனத் தொடர்புக்கிளையினால் வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது. இது இலேசாயிருப்பதும் சபையினால் இதனைக் கொண்டு செல்ல அளிக்கப்படும் லாண்ட் ரோவரில் அல்லது ஒரு கார்க் கூரையின் மேல் இதனைக் கொண்டு செல்லக் கூடியதாயிருப்பதும் இந்நோக்கத்திற்கு மிகவும் பயன்படக் கூடியதாகும். இவற்றுக்காகச் சபை அறவிடும் கட்டணமும் நடுத்தர வகுப்பு இலங்கையர் கூடச் சமாளிக்கக் கூடிய அளவுக்கு நியாயமானதாகும். காலையிலோ அல்லது மாலையிலோ இந்த அம்பலம் ஓயா அல்லது மலையடி நீர்த்தேக்கப் பிரதேசங்கள் கண்டுகளிக்கத்தக்கவை. இன்றைய நிலையில் இந்த நீர்த்தேக்கப் பிரதேசங்கள் அளிக்கும் அனுபவத்தை அடையாமல் கல்லோயாப் பள்ளத்தாக்கு விஜயம் எதுவும் பூர்த்தியடைந்ததுமாகாது.

(கல்லோயா செய்தி)

# அமெரிக்க உதவி

இலங்கைக்கு அமெரிக்கா உதவும் திட்டத்தின்கீழ், இலங்கை அரசாங்கத்தின் மின்சாரப் பகுதியினது பாவனைக்காக, மின்சாரம் பாய்ந்துகொண்டிருக்கையிலேயே கம்பிகளைத் திருத்த உதவும் கருவிகளையும், இழுவை வாகனம் ஒன்றையும் அமெரிக்க அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இவற்றை அமெரிக்க ஸ்தானிகர் செல்வி பிரான்சிஸ் வில்லிஸ் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்.

இவற்றைவிட, ஐந்து பேர்கள் கொண்ட இரு குழுவினரை பங்களூருக்கு அனுப்பி மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கையிலேயே அதன் கம்பிகளை நன்னிலைப்படுத்தப் பயிற்சி பெறவும் அமெரிக்கா உதவும்.

பாலத்துறையில் உள்ள உஷ்ண மின்சார நிலையத்தில் தலைமை விடுதி என்ஜினியரின் காரியாலயத்தில் இந்த அமெரிக்க அன்பளிப்பை வழங்க, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் காணி, விவசாய அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா அவற்றை ஏற்றுக்கொண்டார். அரசாங்க மின்சாரப் பகுதியின் பதில் பொது முகாமையாளர் திரு. ஈ. பி. சுவான் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கையிலேயே அதன் கம்பிகளை நன்னிலையில் வைத்திருத்தல் என்றால் என்ன என்பதைப் பொதுப்படையாக விளக்கினார். இக்கருவிகளைக் கொண்டு மின்சார ஓட்டத்தை நிறுத்தாது, கம்பிகளைப் பாதுகாத்து நன்னிலைப் படுத்தலாம் என விளக்கினார்.

"சுமார் 132,000 வோல்ற் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும் கம்பிகளிலும், மின்சார ஓட்டத்தை நிறுத்தாது நன்னிலைப்படுத்தும் வேலைகளைக் கவனிப்பதற்கு எங்கள் குழுவினர் பயிற்றப் பட்டுள்ளனர்" என அமெரிக்க ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

இந்த அன்பளிப்புகளுக்காகக் காணி விவசாய அமைச்சர் அமெரிக்க அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

தெகிவளை—கல்கிசை

## விவசாயத் திட்டங்கள்

மொறட்டுவை, கோட்டைத் தொகுதிகளை அடுத்துள்ள கல்கிசை, தெஹிவளைப் பகுதியில் உள்ள விவசாய, நீர்ப்பாசன திட்டங்கள் சிலவற்றை காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா இம்மாதம் 16 ஆம் திகதி பார்வையிட்டார். அவருடன், தெஹிவளை-கல்கிசைப் பாராளுமன்றப் பிரதிநிதி டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, மொறட்டுவை ஜனப்பிரதிநிதி திரு. மெறில் பெர்னாந்து, கோட்டை-கல்கிசை கிராமச் சங்கத்தின் உறுப்பினர் சிலர், இலாக்கா அதிகாரிகள் சிலர் ஆகியோரும் அமைச்சருடன் சென்றனர்.

இரத்மலானை விமான நிலையத்தின் கிழக்கு ஓரத்தில் • பற்றை மண்டிக் கிடக்கும் 50 எக்கர் நிலத்தையும் அமைச்சர் பார்வையிட்டார். தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ், இந்நிலத்திலும் பயிர்செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பாடசாலைகளின் மாணவர் வத்தாளங் கிழங்கு, நிலக்கடலை முதலியன பயிரிட்டுள்ள பகுதிகளையும் அமைச்சர் பார்வையிட்டார். இப்பயிர்களின் விளைவுகளை விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு பட்டிப்பளையில் மாணவருக்கான சௌக்கிய விடுதி ஒன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்திடிய நீர் இறைப்புத் திட்டத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 7275—5,008 (1/63)